1979 மார்ச் 15]

வைத்து பூமியிலே என்ன என்ன மினரல்கள் கிடைக்கின்றன என்று கண்டுபிடிக்கப்படுவதற்கு சேடலைட் இமாஜரியைப் பயன் படுத்துகிறார்கள். இந்தத் திட்டம் சேலம், கோயம்புத்தூர், தென் ஆற்காடு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலே மேற் கொள்ளப்படுகிறது. ஜனவரி 1979 இல் இந்த சர்வே முடிக்கப் பட்டிருக்கிறது. அதன் இறுதி அறிக்கை ஏப்ரல் 1979 இல் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு எஸ். ஜெ. சாதிக் பாட்சா ; தலைவர் அவர்களே, என்ன என்ன கனி வளங்கள் ஆராயப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே அறிக்கை கிடைத்த பிறகு தான் அவைபற்றி அறிவிக்க இயலும்.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்படும் கனி வளப் பகுதிகளில் கனி வளம் வெட்டியெடுக்கப்பட என்ன என்ன ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன? அதைப் போலவே 2, 3 இடங்களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், குறிப்பாக தன்னுடைய தென் ஆற்காடு மாவட்டத்தையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சை மாவட்டத்திலே ஏதேனும் அத்தகைய கனி வளப் பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டனவா? இனியேனும் அத்தகைய முயற்சியை அங்கே மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, சேலம், கோயம்புத்தூர், தென்னார்க்காடு, வடார்க்காடு மாவட்டங்களில்கூட 'சர்டன் செலக்டெட் ஏரியாஸ்' என்ற முறையில் சில பகுதிகளில் அது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்த பிறகு அதன் மூலம் என்ன பலன் ஏற்படும் என்பதைப் பார்த்து வேண்டுமானால் மற்ற மாவட்டங் களுக்கும் அதை விஸ்தரிக்க அரசு ஆராயும்.

வடாற்காடு மாவட்டத்தில் மாக்னசைட் படிவங்கள்.

*வினா எண். 401 திரு எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை, செங்கம், போளூர் வட்டப் பகுதிகளில் கவுதி மலை, வேதியப்பன் மலை, உச்சி மலை (ஒதுக்கக்காடுகள்) மேல் செங்கம், கம்பகுடி வசந்தபுரம், பிஞ்சூர், (ஒதுக்கக்காடுகள்) ராதாபுரம் (ஒதுக்கக் காடுகள்) குட்டவாடி (ஒதுக்கக்காடுகள்) சதானந்தல் மற்றும் வைவிடந்தாங்கல் ஆகிய இடங்களில் மாக்னசைட் இரும்புத் தாது படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை மாக்னசைட் இரும்புத்தாது வெங்கக்கல் சேர்ந்த படிவங்கள். இப்படிவங் களில் முப்பத்தைந்து முதல் நாற்பது சதவீதம் வரை இரும்புச் சத்து உள்ளது. இம்மாவட்டத்தில் ஏறத்தாழ இருநூறு மில்லியன் மெட்ரிக் டன்கள் இரும்புப் படிவங்கள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இரும்புத் தாதுக்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் அறிவித்திருக் கிறார்கள். ஏற்கனவே ஐந்தாண்டுக் காலத்திற்கு முன்பு ஜப்பானிலிருந்து பல்வேறு நிபுணர்கள் வந்து திருவண்ணாமலையில் தங்கி அதை ஆராய்ந்தார்கள். அப்பொழுதிருந்த அரசு, தமிழக அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் அனுமதித்தால் ஜப்பான் அரசுடன் கூட்டாகச் சேர்ந்து நாம் இரும்புத் தாது எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டதாக நான் அறிகிறேன். அந்த வகையில் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அந்தப் பகுதியில் இரும்புத் தாது எடுத்தால் இலாபகரமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த 'மாக்னசைட் ஓர்' ஓர் இவைகளிலிருந்து இரும்புத்தாது எடுப்பது மிகவும் சுலபம். ஏனென்றால் காந்தத்தின் பயனை எடுத்து இரும்புத் தாது எடுக்கலாம் 'ஸ்பெஷல் அல்லாய் ஸ்டீல் உற்பத்தி செய்ய இது மிகவும் உகந்தது. ஜப்பான் நாடு இதை விரும்பிக் கேட்டிருக்கிறது. ஆனால் இந்தத் தாதுவிலிருந்து இரும்புத் தாதுவை எடுத்து நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய அரசு முன்னுரிமை அளிக்கவில்லை.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மத்திய உதவி.

*வினா எண் : 402 திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்பு மிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் சமீபத்தில் அடித்த புயலில் பாதிக்கப் பட்ட இடங்களுக்கு மத்திய அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட குழுவானது எந்தெந்த இடங்களை நேரில் சென்று பார்வை யிட்டது?